DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.

CC-4/2020

Prosecution witness – PW 1

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.முனியசாமி | Caste: | |
| Father's Name | : | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

(Accused absent. Petition U/s 317 Cr.P.C filed and allowed.)

19.05.2026 – 12.30 PM

<u>முதல் விசாரணை</u>:–

1. நான் ஆப்பனூரில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். மேலும் எங்கள் ஊரின் தெற்கு கொட்டகையில் ஸ்ரீ பீலிக்கான் முனீஸ்வரர் கோவிலில் பூசாரியாகவும் இருந்து வருகிறேன். நான் வழக்கமாக காலை 07.00 மணிக்கு கோவிலுக்கு சென்று பூஜைகளை செய்து முடித்து விட்டு காலை 10.00 மணிக்கு நடையை சாத்திவிட்டு சென்று விடுவேன். பிறகு மாலையிலும் 06.00 மணிக்கு வந்து பூஜை செய்து விட்டு 07.00 மணிக்கு சென்று விடுவேன். அந்த வகையில் கடந்த 27.02.2018ம் தேதி காலை 07.00 மணிக்கு நான் கோவிலுக்கு வந்த போது கோவில் வாசலில்இருந்த பூட்டு உடைக்கப்பட்டிருந்தது. அதனால் நான் சந்தேகப்பட்டு ஊர்காரர்கள்ளான முருகவேல், வடிவேல் ஆகியோர்களுக்கு தகவல் தெரிவித்தேன்.

2. நான் கோவிலின் உள்ளே சென்று பார்த்தபோது கோவிலில் வைக்கப்பட்டிருந்த உண்டியல் காணாமல் போய்இருந்தது. அதனால் அன்றைய தினமே காலை 11.00 மணிக்கு கடலாடி காவல் நிலையம் சென்று எழுத்துப்பூர்வமான புகார் அளித்தேன். வருடந்தோறும் கோவில் உண்டியலை திறந்து காணிக்கைகளை எண்ணுவது வழக்கம். அதன்படி கோவிலின் உண்டியலில் தோராயமாக ரூ.25,000/– வரை காணிக்கைகள் இருந்திருக்க வேண்டும். எனவே மேற்படி சங்கதிகளை கூறி புகார் அளித்தேன். என்னிடம்

காட்டப்படும் புகார் மனு நான் அளித்தது தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஆனால் எங்கள் கோவிலில் இருந்த களவு போன உண்டியல் தற்போது வரை கிடைக்கவில்லை. போலீசார் வழக்கு பதிவு செய்து என்னை விசாரித்தனர்.

<u>**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை: –**</u>

போலீசார் என்னை இந்த வழக்கு சம்மந்தமாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். நான் யூகத்தில் தான் உண்டியலில் ரூ.25,000/– இருக்கும் என கூறுகிறேன் என்றாலும் என்னால் அறுதியிட்டு கூற இயலாது என்றால் சரிதான். புகார் மனுவை நான் கைப்பட எழுதவில்லை. ஏனென்றால் எனக்கு தமிழ் படிக்க தெரியும், எழுத தெரியாது. அதனால் எங்கள் ஊரிலுள்ள ஒரு கடையில் மனு எழுதும் ஒரு நபரிடம் கொடுத்து புகாரை எழுதி வாங்கினேன். நான் கூறியவைகளை தான் மனுவாக எழுதிக்கொடுத்தார்கள். நான் முதல் விசாரணையில் கூறியபடி சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், போலீசார் கேட்டுக்கொண்டதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் கூறியபடி எங்கள் கோவிலில் இருந்து உண்டியல் களவு செய்யப்பட்டிருந்தால், அதை போலீசார் கைப்பற்றி இருப்பார்கள் என்றாலும், இது புள்ளி விவர கணக்கிற்காக போடப்பட்ட வழக்கு என்றாலும் சரியல்ல.

ஓம்/G.தங்ககார்த்திகா
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர் (மு.கூ.பொ)
கடலாடி